## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைக்கான இலங்கைப் பேரவைச் சட்டம்

---

*[1987, டிசெம்பர் மாதம் 09 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1987 டிசெம்பர் 11 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது**

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.50 — தபாற் செலவு : ரூபா 1.15

**1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைக்கான இலங்கைப் பேரவைச் சட்டம்**

[1987 டிசெம்பர் 09 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

**ச. வ. ஓ. 44/86**

கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைக்கான இலங்கைப் பேரவையைத் **தாபிப்பதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைக்கான இலங்கைப் பேரவைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். **சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.**

## பாகம் I

கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைக்கான இலங்கைப் பேரவையின் தாபிப்பு.

2. (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பிடு செய்யப்படும்.) "கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைக்கான இலங்கைப் பேரவை" என அழைக்கப்பட வேண்டியதான ஒரு பேரவை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, தாபிக்கப்படுதல் வேண்டும். **கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைக் கான இலங்கைப் பேரவையின் தாபிப்பு.**

3. பேரவையானது, 2 ஆம் பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரின் மூலம் கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், இடையறு வழியுரிமையும் பொது இலச்சினையும் கொண்டிருத்தலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். **பேரவை, கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாக விருத்தல்.**

4. (1) பேரவையானது, அமைச்சரினால் பின்வருமாறு நியமிக்கப்பட்ட பதினான்குக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :— **பேரவையின் உறுப்பினர்கள்.**

(அ) கமத்தொழில் ஆராய்ச்சி அல்லது கமத்தொழில் ஆராய்ச்சியுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் விடயம், வேறெவரேனும் அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டிருப்பின், அத்தகைய அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அத்தகைய விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(ஆ) நிதி, திட்டமிடல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அவ்வமைச்சரினது அமைச்சின் பிரதிநிதியொருவர் ;

2—எ 098022—2,820 (87/07)

(இ) 1981 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, இலங்கை இயற்கை மூல வளங்கள், சக்தி அத்துடன் அறிவியல் அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இயற்கை மூலவளங்கள், சக்தி அத்துடன் அறிவியல் அதிகார சபையின் பணிப்பாளர் தலைமையதிபதியின் கலந்தாலோசனையுடன் இயற்கை மூலவளங்கள், சக்தி அத்துடன் அறிவியல் அதிகாரசபையின் பிரதிநிதியொருவர் ;

(ஈ) பலவருடங்களுக்குப் பயன்தரும் பயிர்களின் பயிர்ச் செய்கை பற்றிய ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றின் பணிப்பாளராகவுள்ள ஆள் ஒருவர் அல்லது கமத்தொழில் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றின் கமத்தொழில் ஆராய்ச்சி வேலைக்குப் பொறுப்பானவராகவுள்ள ஆள் ஒருவர் ;

(உ) வருடாவருடம் பயன்தரும் பயிர்களுடன் தொடர்புடைய கமத்தொழில் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றின் பணிப்பாளராகவுள்ள ஆள் ஒருவர் அல்லது கமத்தொழில் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றின் கமத்தொழில் ஆராய்ச்சி வேலைக்குப் பொறுப்பாகவுள்ள ஆள் ஒருவர் ;

(ஊ) பண்ணை விலங்குகள் உற்பத்தியுடன் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றின் பணிப்பாளராகவுள்ள ஆள் ஒருவர் அல்லது ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றின் ஆராய்ச்சி வேலைக்குப் பொறுப்பானவராகவுள்ள ஆள் ஒருவர் ;

(எ) காட்டியலுடன் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றின் பணிப்பாளராகவுள்ள ஆள் ஒருவர், அல்லது ஆராய்ச்சி நிறுவனமொன்றின் ஆராய்ச்சி வேலைக்குப் பொறுப்பானவராகவுள்ள ஆள் ஒருவர் ;

(ஏ) கடற்றொழிலுடன் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றின் பணிப்பாளராகவுள்ள ஆள் ஒருவர் அல்லது ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றின் ஆராய்ச்சி வேலைக்குப் பொறுப்பாளராகவுள்ள ஆளொருவர் ;

(ஐ) (289 ஆம் அத்தியாயமான) 1895 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை வர்த்தக மன்றத்தின் ஆளுநர் குழுவின் கலந்தாலோசனையுடன், அம் மன்றத்தின் பிரதிநிதி ஒருவர் ;

(ஒ) அரச பெருந்தோட்டங்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பானவராகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் சிறு பற்றுநிலச் சொந்தக்காரரைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கான ஆள் ஒருவர் ;

(ஓ) மக்கள் தோட்ட அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பானவராகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும், அரச பெருந்தோட்டங்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பானவராகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் கலந்தாலோசனையுடன் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினையும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினையும் பிரதிநிதித்துவம் செயவதற்கான ஆள் ஒருவர் ;

(ஔ) உயர்கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பானவராகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் கலந்தாலோசனையுடன், பல்கலைக்கழகங்களில் கமத்தொழில் ஆராய்ச்சியில் தம்மைச் சிறப்புமிக்கவராக்கிக் கொண்டவரான ஆள் ஒருவர் ;

(க) பேரவையின் விதப்புரையின் மேல், அறிவியல் ஆராய்ச்சி, முகாமை என்பவற்றில் தம்மைச் சிறப்புமிக்கவராக்கிக் கொண்டவரான ஆள் ஒருவர் ; அத்துடன்

(ங) பேரவையின் செயலாளர்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ), (உ) என்னும் பந்திகளின் நியதிகளின்படி பேரவைக்கான உறுப்பினர்களின் நியமனமானது, பேரவையால் ஆக்கப்பட வேண்டியனவான விதிகளுக்கு இணங்க, பணிப்பாளர்களையும், அத்தகைய பந்தி ஒவ்வொன்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளவர்களான வேறு ஆட்களையும் கொண்ட ஒவ்வொரு குழுவுக்குமிடையே நடாத்தப்படவுள்ள தேர்தலின் பெறுபேறுகளுக்கமையச் செய்யப்படுதல் வேண்டும்.

5. ஆள் ஒருவர்— உறுப்பினர் ஒருவராவதற்குள்ள தகைமையீனம்.

(அ) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக இருந்தால் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை உறுப்பினர் ஒருவராக இருந்தால் ; அல்லது,

(ஆ) இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருந்தால் அல்லது இலங்கைப் பிரசையொருவராக இல்லாதொழிந்தால் ;

(இ) இலங்கையிலுள்ள அல்லது ஏதேனும் வேறு நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டதான மறியல் தண்டனை ஒன்றினை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்,

அந்த ஆள், சபை உறுப்பினர் ஒருவராக நியமனம் செய்யப்படுவதற்கு அல்லது உறுப்பினர் ஒருவராக தொடர்ந்தும் இருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

6. (1) பேரவைச் செயலாளர் தவிர்ந்த பேரவை உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் மரணம், பதவிதுறத்தல், அல்லது பதவியினின்றும் அகற்றப்படுதல் என்பவற்றிற்காக முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி மூன்றாண்டுகள் கொண்ட ஒரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும். உறுப்பினர்கள் பதவிக்காலம்.

(2) மூன்றும் உட்பிரிவின்கீழ் பதவியினின்றும் அகற்றப்பட்டவரான உறுப்பினர் ஒருவர் தவிர்ந்த உறுப்பினர் ஒவ்வொருவரும், மீண்டும் நியமனம் செய்யப்படுவதற்குத் தகுதியானவராவார். ஆயின், எச்சந்தர்ப்பத்திலும் உறுப்பினர் ஒருவர் தொடர்ச்சியான மூன்று பதவிக்காலங்களுக்குப் பதவி வகித்தற்கு நியமனம் செய்யப்படுதலாகாது.

(3) அமைச்சர், அவர் அவசியமானதெனக் கருதினால், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அதற்கான காரணம் எதுவும் குறித்துக் காண்பிக்காமல், உறுப்பினர் எவரையும் பதவியினின்றும் அகற்றலாம்.

(4) பேரவை உறுப்பினர் எவரும் எந்நேரத்திலேனும் அந்நோக்கத்திற்கென முகவரியிட்டெழுதப்பட்ட கடிதம் மூலம் பதவியைத் துறக்கலாம். இவ்வுட்பிரிவின்கீழான பதவிதுறத்தல் அமைச்சரானவர் பதவிதுறப்பவரான உறுப்பினருக்கு அவரது பதவிதுறத்தல் ஏற்றுக்கொள்ளப்பட்டதென எழுத்தில் அறிவிக்கும்வரையில் பயனுடையதாதலாகாது.

(5) பேரவை உறுப்பினர் ஒருவர், மரணம், பதவிதுறத்தல் அல்லது பதவியினின்றும் அகற்றப்படுதல் என்ற காரணங்களுக்காக பதவியை வறிதாக்கினால், அமைச்சர், 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்தில் கொண்டு அத்தகைய உறுப்பினருக்குப் பதிலாக வேறு ஓர் உறுப்பினரை நியமிக்கலாம்.

(6) ஐந்தாம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்டவரான உறுப்பினர் ஒருவர் அவரது முற்பதவியாளரது பதவிக்காலத்தில் எஞ்சியுள்ள காலப் பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டும்.

(7) பேரவை உறுப்பினர் ஒருவர், சுகவீனம், உடற்குறைபாடு அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாத ஒரு காலப்பகுதிக்கு, இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது பதவிக்கான கடமைகளைத் தற்காலிகமாகப் புரியமுடியாத நிலையில் இருக்குமிடத்து, அவர் அவ்வாறு அமைச்சருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும் என்பதுடன், அமைச்சரானவர் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்தில் கொண்டு அத்தகைய உறுப்பினருக்குப் பதிலாகச் செயற்படுவதற்கென வேறு ஓர் ஆளை நியமிக்கலாம்.

**பேரவைத் தவிசாளர்.**

7. (1) பேரவைத் தவிசாளரானவர், பேரவை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்படுதல்வேண்டும்.

(2) பேரவைத் தவிசாளரானவர், சுகவீனம், வேறு உடற்குறைபாடு அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது பதவிக்கான கடமைகளைப் புரியமுடியாதவராய் இருப்பின், பேரவை, அவரது இடத்திற் செயலாற்றுவதற்கென வேறு ஓர் ஆளை நியமிக்கலாம்.

(3) தவிசாளரானவர் அமைச்சருக்கு முகவரியிட்டு எழுதப்பட்ட கடிதத்தின் மூலம் தவிசாளர் பதவியினை துறக்கலாம்.

(4) தவிசாளரது பதவிக்காலமானது அவர் பேரவை உறுப்பினராக பதவி வகிக்கும் காலமாக இருத்தல் வேண்டும்.

(5) தவிசாளர், பேரவையில் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை வகித்தல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் தவிசாளர் வருகை தாராதபோது, வருகைதந்தவர்களான உறுப்பினர்கள் அக்கூட்டத்தில் தலைமை வகிப்பதற்கெனத் தங்களில் ஒருவரைத் தெரிந்தெடுத்தல் வேண்டும்.

(6) எக்கூட்டத்திலும் தவிசாளர் அல்லது தலைமை தாங்கும் உறுப்பினர், அவருக்குரிய வாக்குடன் மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

8. பேரவை, அதன் உறுப்பாண்மையில் வெற்றிடம் எதுவும் காணப் படினும்கூட செயலாற்றும் தத்துவம் கொண்டதாதல் வேண்டும் எனப் துடன் பேரவையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப் பினர்களுக்கிடையில் ஏதேனும் வெற்றிடம், அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் குறைபாடு இருப்பதன் காரணத்திற்காக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

பேரவையின் செயல் அல்லது நடவடிக்கை ஏதேனும் வெற்றிடம் அல்லது உறுப் பினர் ஒருவரின் நியமனத்தில் குறைபாடு காரணமாகச் செல்லுபடியற்ற தாகக் கருதப் படுதலாகாது.

9. (1) பேரவையின் இலச்சினை, பேரவையின் செயலாளரின் கட்டுக் காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன், பேரவையினால் தீர்மானிக்கப் படக்கூடிய அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

பேரவையின் இலச்சினை.

(2) இலச்சினையானது தவிசாளரினதும் செயலாளரினதும் சமூகத்தி லன்றி, சாதனம் அல்லது ஆவணம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது என் பதுடன் அவர்கள் தாம் சமூகமாயிருந்ததற்கு அடையாளமாக சாதனத் தில் அல்லது ஆவணத்தில் ஒப்பமிடுதலும் வேண்டும்.

(3) தவிசாளர் அல்லது செயலாளர் வருகை தாராதபோது வேறு இரு உறுப்பினர்களின் சமூகத்தில் இலச்சினையானது பொறிக்கப்படலாம் என் பதுடன், அவர்கள் தாம் சமூகமாயிருந்ததற்கு அடையாளமாக சாதனத் தில் அல்லது ஆவணத்தில் ஒப்பமிடுதலும் வேண்டும்.

(4) பேரவையானது, பேரவையின் இலச்சினையானது பொறிக்கப்பட்ட தான சாதனங்கள், ஆவணங்கள் என்பன பற்றிய இடாப்பு ஒன்றினைப் பேணிவருதல் வேண்டும்.

10. (அ) கமத்தொழில் ஆராய்ச்சியை ஒழுங்கமைத்தல், ஒருங்கிணைத் தல், திட்டமிடல் அத்துடன் நிறைவேற்றுதல் சம்பந்தமான எல்லாக் கரு மங்கள் பற்றியும் அத்துடன் அமைச்சரினால் அதற்கு ஆற்றுப்படுத்தப் படக் கூடியதான தொடர்புபட்ட அத்தகைய வேறு கருமங்கள் பற்றியும் அரசாங்கத்திற்கு அறிவுரை வழங்குதல்.

பேரவையின் பணிகள்.

(ஆ) தேசிய கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கையினையும், முன்னு ரிமைகளையும் வகுத்தமைத்தல் ;

(இ) தேசிய அபிவிருத்திக் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் கமத்தொழில் ஆராய்ச்சியின் அனைத்தும் அளாவிய இலக்கு களையும் நோக்கெல்லைகளையும் வரைவிலக்கணப்படுத்தல் ;

(ஈ) கமத்தொழில் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் தாபனங்களுக்கும் தேவையான நிதி, ஆள் வலு அத்துடன் பௌதிக மூலவளங்கள் என்பன பற்றியும், அத்தகைய நிறுவனங்கள், தாபனங்கள் ஆகியவற்றின் பணி யாட்டொகுதியின் சேவை நியதி நிபந்தனைகள் என்பன பற்றியும் தோதான அதிகாரசபைகளுக்கு அறிவுரை வழங்குதல் ;

(உ) நிறுவனஞ்சார் அத்துடன் இணைக்களஞ்சார் கமத்தொழில் ஆராய்ச்சித் திட்டங்களைப்பற்றி ஆய்வுசெய்தல், அத்துடன் அவற்றின் முன்னுருமைகள் மற்றும் அவற்றிற்கு நிதி வழங்குதல் சம்பந்தமாக நிதி, திட்டமிடல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பானவரான அமைச்சரினது அமைச்சுக்கு விதப்புரைகளைச் செய்தல் ;

(ஊ) கமத்தொழில் ஆராய்ச்சியின், சிறப்பினை மேம்படுத்தலும், ஊக்குவித்தலும் ;

(எ) கமத்தொழில்ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே தொடர்பு வழியாகச் செயலாற்றுதல் ;

(ஏ) நிறுவனங்கள் இடையிலான வகையிலமைந்த கமத்தொழில் ஆராய்ச்சி கருத்திட்டங்களுக்கு ஒழுங்குசெய்தல், நிதி வழங்குதல் ;

(ஐ) முழுக் கமத்தொழில் ஆராய்ச்சித் துறைக்குமான சிறப்பான அறிவியல் சேவைகளுக்கு ஒழுங்கு செய்தலும் நிதிவழங்குதலும் ;

(ஒ) தேசிய அத்துடன் சர்வதேச மட்டத்தில் கமத்தொழில் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இடையே இணைப்பினை மேம்படுத்தல் ;

(ஓ) கமத்தொழில் ஆராய்ச்சி தொடர்பில், சர்வதேச அத்துடன் நிறுவனங்களுக்கு இடையிலான பிரச்சினைகள்பற்றி மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் ஒழுங்குசெய்தல் ;

(ஔ) கமத்தொழில் ஆராய்ச்சிப் பணியாட்டொகுதியின் பட்டதாரிப் பின்படிப்புப் பயிற்சிக்கும் அத்துடன் வெளிநாடுகளிலுள்ள அங்கீகரிக்கப் பட்ட ஆராய்ச்சி நிறுவனங்களுடன் அறிவியலாளர்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் ஒழுங்குசெய்தல் ;

(க) காலத்திற்குக் காலம் கமத்தொழில் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களது, நிறுவனங்களது அத்துடன் பிரிவுகளது சாதனைகளை ஆய்வுசெய்தல் என்பன பேரவையின் பணிகளாதல் வேண்டும்.

பேரவையின் தத்துவங்கள்.

**11.** பேரவையானது, பின்வரும் தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எவற்றையேனும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அவற்றைப் பிரயோகிக்கவும் செய்யலாம் :—

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தன்மைத்தான ஏதேனும் முறையில் கொள்ளுதல், வைத்திருத்தல் அத்துடன் அத்தகைய ஏதேனும் ஆதனத்தை விற்றல், குத்தகைக்கு விடுதல், ஈடுவைத்தல், கொடுத்துமாற்றல் அல்லது வேறு விதமாகக் கையுதிர்த்தல் ;

(ஆ) ஏதேனும் வங்கியில் அல்லது வங்கிகளில் நடப்பு, சேமிப்பு அல்லது வைப்புக் கணக்குகளைத் திறத்தல், செயற்படுத்துதல், அத்துடன் மூடுதல் ;

(இ) அதன் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் என்பனவற்றைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்து கொள்ளல் ;

(ஈ) அதன் நிதியங்களை அது தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய பிணைப் பொறுப்புகளில் முதலீடு செய்தல் ;

(உ) அதன் அலுவலர் அத்துடன் சேவையாளர்கள் என்போர்களை நியமித்தல், வேலைக்கமர்த்தல், அவர்களுக்கு ஊதியம் வழங்கல், அத்துடன் அவர்கள்மேல் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகளைப் பிரயோகித்தல் ;

(ஊ) பேரவையின் அலுவல்களை நிருவாகம் செய்தல் தொடர்பாக விதிகளை ஆக்குதல் ;

(எ) பேரவையின் எவரேனும் உறுப்பினருக்கு, செயலாளருக்கு அல்லது அலுவலர்க்கு அல்லது சேவையாளருக்கு, பேரவையானது அதன் அலுவல்களை திறமையாகக் கொண்டு நடாத்துவதற்கு அவசியமானவையெனக் கருதக்கூடியவாறான அத்தகைய பணிகளைக் கையளித்தல் ;

(ஏ) இச்சட்டத்தில் குறிப்பாக ஏற்பாடு செய்யப்படாதவையான கருமங்கள்பற்றி பேரவையின் அல்லது அதன் ஏதேனும் குழுவின் கூட்டங்கள் நடாத்தப்படுவது பற்றி விதிகளை ஆக்குதல்.

## பாகம் II

### பேரவையின் பணியாட்டொகுதி

**பேரவையின் செயலாளர்.**

12. (1) பேரவையின் செயலாளர் பேரவையின் விதப்புரையின் பேரில் அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய விதப்புரை, முதலாவது செயலாளரினது நியமனத்தின் விடயத்தில் அவசியமானதாதல் ஆகாது.

(2) செயலாளர், மரணம், பதவிதுறத்தல் அல்லது அகற்றப்படுதல் என்ற காரணங்களுக்காக பதவியை வறிதாக்குகின்றவிடத்து, அல்லது செயலாளர் சுகவீனம் அல்லது வேறு காரணத்தால், தற்காலிகமாக அவரது கடமைகளைக் கவனிக்க முடியாமல் இருந்தால், பேரவையானது, விடயத்திற்கு ஏற்ப, புதிய ஒரு நியமனம் செய்யப்படும் வரையில் அல்லது செயலாளர் மீண்டும் கடமையில் ஈடுபடும்வரையில், அது செயலாளருக்குப் பதிலாகச் செயலாற்றுவதற்கென பொருத்தமானவரும் தகுதியானவருமான ஓர் ஆளை நியமித்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, பேரவையின் கூட்டங்களைக் கூட்டுதலும், பேரவையின் முடிவுகளுக்குப் பயன்தருதலும் செயலாளரின் கடமையாக இருத்தல் வேண்டும்.

(4) பேரவையானது, அதன் அலுவல்களைத் திறமையாகக் கொண்டு நடாத்துவதற்கு அவசியமானதென அது கருதுகின்றவாறான அத்தகைய தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் செயலாளருக்குக் கையளிக்கலாம்.

(5) செயலாளர், பேரவையின் கூட்டம் எதனிலும் அல்லது அதன் ஏதேனும் குழுக்களில் பேசுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும். ஆயின், அத்தகைய கூட்டம் எதனிலும் வாக்களித்தற்கு உரித்துடையவராகார்.

செயலாளரின் பணிகள்.

13. செயலாளர், பேரவையின் பொதுவான பணிப்பின்கீழ், பின்வரும் பணிகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும் :—

(அ) பேரவையின் கூட்டங்கள் எல்லாவற்றினதும் நிகழ்ச்சிக் குறிப்புகளைத் தயாரித்து விநியோகித்தல் ;

(ஆ) பேரவையின் வேலைகள் தொடர்பான விடயங்கள் பற்றி பத்திரங்களைத் தயாரித்தல் அல்லது தயாரிக்குமாறு செய்வித்தல் ;

(இ) கமத்தொழில் ஆராய்ச்சியுடன் சம்பந்தப்பட்டதான எல்லா நிறுவனங்களிலும் தாபனங்களிலும் கமத்தொழில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள ஆட்கள் பற்றி இடாப்பு ஒன்றினைப் பேணிவருதல்.

(ஈ) பேரவையின் வரவு செலவுத் திட்டத்தை தவிசாளரோடு கலந்தாலோசித்துக் கொண்டு தயாரித்தல் ;

(உ) கமத்தொழில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவையான நிறுவனங்களுக்கும், தாபனங்களுக்கும், ஆராய்ச்சிச் செயற்றிட்ட வகுத்தமைத்தலுக்கும், கருத்திட்டங்களைத் தயாரிப்பதற்கும், ஆராய்ச்சிக் கருத்திட்டங்களையும், செயற் திட்டங்களையும் கண்காணித்து மதிப்பீடு செய்வதற்கும் ஆன காரியக்கிரமங்களின் அபிவிருத்தியிலும் அத்துடன் கமத்தொழில் ஆராய்ச்சி முகாமையிலும் உதவிசெய்தல் ;

(ஊ) கமத்தொழில் ஆராய்ச்சியின் பல்வேறு அம்சங்கள் பற்றி கருத்தரங்குகள், வேலைக்களங்கள், மாநாடுகள் ஆகியவற்றை ஒழுங்கு செய்தல் ;

(எ) கமத்தொழில் ஆராய்ச்சி அல்லது ஏதேனும் கமத்தொழில் ஆராய்ச்சி நிறுவனங்கள் அல்லது தாபனங்கள் தொடர்பான ஏதேனும் கருத்திட்டங்களை ஆய்வு செய்வதற்கென அல்லது மதிப்பிடுவதற்கென ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆய்வுக் குழுக்கள் அத்துடன் ஆலோசகர்கள் என்போரது ஆய்வு எல்லையின் நியதிகளை வரைதல் ;

(ஏ) கமத்தொழில் ஆராய்ச்சி அத்துடன் ஆராய்ச்சிக்கான நிதியத்தினை வழங்குதல் என்பன தொடர்பான இலக்கியங்கள் வெளியிடப்படுவதில் உதவுதல் அத்துடன் அத்தகைய இலக்கியங்களை வெளியிடும் நிறுவனங்களது செயல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் ; அத்துடன்

(ஐ) சிறக்கப்பட்ட உற்பத்தி முறைகள் தொடர்பான தகவல்களைப் பரப்புவதற்கான செவிகட்புல துணைச்சாதனங்கள் கிடைக்கத் தக்கனவாகச் செய்தல்.

பேரவையின் பணியாட்டொகுதி.

14. (1) பேரவையானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக—

(அ) பேரவையினது கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு, பேரவையானது அவசியமானதெனக் கருதுவதான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம் என்பதுடன், அத்தகைய அலுவலர், சேவையாளர்கள் மேல் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டினையும் பிரயோகிக்கலாம்;

(ஆ) அத்தகைய அலுவலர்களுக்கும், சேவையாளர்களுக்கும் ஊதியம் வழங்கப்பட வேண்டியதான வீதங்களை நிர்ணயிக்கலாம்;

(இ) அத்தகைய அலுவலர்களதும் சேவையாளர்களதும் சேவை நியதி நிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்; அத்துடன்

(ஈ) அத்தகைய அலுவலர்கள் சேவையாளர்கள் என்போரினது நலனுக்காக சகாய நிதிகளை அல்லது திட்டங்களைத் தாபிக்கலாம், ஒழுங்குபடுத்தலாம் அத்துடன் பேரவையின் நிதியத்திலிருந்து அத்தகைய ஏதேனும் நிதியத்திற்கு உதவுதொகைகளைச் செலுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதான எல்லா அல்லது எவையேனும் கருமங்கள் தொடர்பில் பேரவை விதிகளை ஆக்கலாம். அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஆக்கப்படும் விதிகள், 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சகாயநிதியச் சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு முரணாகை இல்லாதவையாகவிருத்தல் வேண்டும்.

பகிரங்க அலுவலர்கள் பேரவையின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படுதல்.

15 (1). பேரவையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரேனும், அந்த அலுவலரினதும், அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பானவரான அமைச்சரின் பொறுப்பிலுள்ள அமைச்சின் செயலாளரினதும் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்திற்குப் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கப் போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படும், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும் என்பதுடன் முன்னர் சொல்லப்பட்டவாறான 13 ஆம் உட்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், பேரவையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படும் பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர்க்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(3) பேரவையின் வேண்டுகோளின்பேரில், உள்ளூராட்சிச் சேவையின் எந்தவொரு உறுப்பினராவது, அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபையின் வேறு எந்தவோர் அலுவலராவது அல்லது சேவையாளராவது, விடயத்திற்கேற்றவாறு, அத்தகைய உறுப்பினரதும் அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும் உள்ளூர் ஆட்சிச் சேவை ஆணைக்குழுவினதும் அல்லது அந்த அதிகார சபையினதும் சம்மதத்துடன், பேரவையினால் அதே போன்ற சம்மதத்துடன் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்திற்குப் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது பேரவையினாலும், உள்ளூர் ஆட்சிச் சேவை ஆணைக்குழுவினாலும் அல்லது அதிகாரசபையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான ஓய்வூதியம் அல்லது சகாயநிதிய உரிமைகள் தொடர்பான நியதி நிபந்தனைகள் உள்ளிட்ட அத்தகைய நியதி நிபந்தனைகளின்மேல் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(4) எவரேனும் ஆள், (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றிப் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அவர், அத்தகைய பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினர் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராய் இருத்தல் வேண்டும்.

(5) குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டுக்கொண்டுள்ளவரான ஆள் ஒருவரை பேரவை வேலைக்கமர்த்துமிடத்து, அந்த ஆள் பேரவையின் சேவையில் இருந்த காலப்பகுதி எதுவும், அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்குச் செய்த சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலரினதும் அல்லது சேவையாளரினதும் அத்துடன் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையினது சம்மதத்துடன் ஆளும் சபையினாலும் பேரவையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான சகாய நிதிய உரிமைகள் தொடர்பான நியதி நிபந்தனைகள் உள்ளிட்ட அத்தகைய நியதி நிபந்தனைகளின்மேல், பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(7) எவரேனும் ஆள் (6) ஆம் உட்பிரிவின்கீழ் பேரவையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, அவர் அத்தகைய பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினர் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராய் இருத்தல் வேண்டும்.

## பாகம் III

### நிதி

16. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கப் பேரவையால் நிருவகிக்கப்பட வேண்டியதான (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைக்கான பேரவை நிதியம் தாபிக்கப்படுதல் வேண்டும். பேரவையின் நிதியம்.

(2) (அ) பேரவையின் பயன்பாட்டிற்கென காலத்திற்குக்காலம் பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஆ) அதன் தத்துவங்களை, பணிகளை, கடமைகளைப் பிரயோகித்தலில், புரிவதில், நிறைவேற்றுதலில் பேரவையினால் பெற்றுக் கொள்ளப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகையும் ; அத்துடன்

(இ) இலங்கையிலுள்ள அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள, எத்தன்மைத்தான எம் மூலத்திலிருந்தேனும் கடன்கள், நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையில் பேரவையினால் பெற்றுக்கொள்ளப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகையும்,

பேரவை நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் பேரவையின் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகித்தலில், புரிவதில், நிறைவேற்றுதலில் அதனால் உறப்படும் ஏதேனும் செலவினத்தைச் சமாளிப்பதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகையும், அத்துடன் இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டினால் நிதியத்திலிருந்து செலுத்தப்படவேண்டும் எனத் தேவைப் படுத்தப்படும் வேறு ஏதேனும் செலவுகளும் பேரவையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

17. அமைச்சர், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடன் கலந்தாலோசித்து பேரவையின் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கும் புரிவதற்கும் பண்டங்களை இறக்குமதி செய்தல் அல்லது கொள்வனவு செய்தல் உகந்ததெனக் கருதுமிடத்தும், பேரவையால் இறக்குமதி செய்யப்படும் அல்லது கொள்வனவு செய்யப்படும் பண்டங்கள் எவற்றின் மேலுமான சுங்க அல்லது மதுத்தீர்வைக் கொடுப்பனவுகளிலிருந்தான விலக்களிப்பை நிதி அமைச்சர் அங்கீகரிக்குமிடத்து, பேரவையானது அத்தகைய சுங்க அல்லது மதுத்தீர்வைக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுவதாதல் வேண்டும். சுங்கத்தீர்வை முதலியனவற்றிலிருந்து விலக்களிப்பு.

நிதி ஆண்டும், பேரவையின் கணக்குகளின் கணக்காய்வும்.

18. (1) நிதியத்தின் நிதி ஆண்டு பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

(2) பேரவை, நிதியத்தின் வரவு செலவு, சொத்துக்கள் பொறுப்புக்கள், மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன தொடர்பில் முறையான கணக்கேடுகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களினது கணக்குகளின் கணக்காய்வு தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் நிதியத்தினது கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் IV

### பொது

பேரவையின் கூட்டங்கள்.

19. (1) பேரவையானது, ஆறு மாதங்களுக்கு ஒருமுறையாவது கூட்டத்தைக் கூட்டுதல் வேண்டும் என்பதுடன் அதன் கூட்டம் எதற்குமான நடப்பெண் ஐந்தாக இருத்தல் வேண்டும்.

(2) பேரவையின் ஏதேனும் கூட்டத்தின்போது எடுக்கப்படும் முடிபு பற்றிய பிரச்சினைகள் யாவும் சமுகளித்துள்ளவர்களான உறுப்பினர்களின் பெரும்பான்மையினரின் வாக்குகளால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) பேரவையின் உறுப்பினர்களுக்கு கூட்டங்களில் சமுகமளிப்பதற்கென, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும்.

(4) பேரவை, அதன் தத்துவங்கள், கடமைகள் அத்துடன் பணிகளை பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அத்துடன் நிறைவேற்றுவதற்கு அது அவசியமானதெனக் கருதுவதான, கருதக்கூடியவாறான அத்தகைய வேறு நிலையியற் குழுக்களை அல்லது நிமித்தக் குழுக்களை நியமிக்கலாம். அத்தகைய குழு, பேரவையின் உறுப்பினர்களல்லாத ஆட்களையும் கொண்டிருக்கலாம்.

(5) பேரவை, நிலையியற் குழுக்களை அல்லது நிமித்தக் குழுக்களை நியமிக்கும் தருணத்தில், அத்தகைய குழுக்களினது கூட்டங்களுக்குச் சமுகமளிப்பவர்களான உறுப்பினர்களுக்கு, அமைச்சரால் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பானவரான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் நிதியத்திலிருந்து ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும்.

(6) பேரவையானது அதன் தத்துவங்கள், கடமைகள் அத்துடன் பணிகள் ஆகியவற்றுள் எவற்றையேனும் (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதான குழுக்களுக்குக் கையளிக்கலாம். பேரவை அத்தகைய கையளிப்பு எப்படியிருப்பினும் அவ்வாறு கையளிக்கப்பட்டதான தத்துவம், கடமை அல்லது பணி எதனையும் பிரயோகிக்கலாம், புரியலாம், அத்துடன் நிறைவேற்றலாம்.

20. அமைச்சர், பேரவையின் கலந்தாலோசனையுடன் காலத்திற்குக் காலம், பேரவை அதன் தத்துவங்கள், பணிகள் அத்துடன் கடமைகள் என்பனவற்றைப் பிரயோகித்தல், புரிதல் அத்துடன் நிறைவேற்றுதல் தொடர்பிலான அத்தகைய பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளை அவை கொள்கை பற்றிய விடயங்கள் தொடர்பினவாக இருக்கும் அளவுக்கு எழுத்தில் வழங்கலாம் என்பதுடன், பேரவையானது அத்தகைய பணிப்புகளுக்குப் பயன்தருதலும் வேண்டும். அமைச்சரது பணிப்புகள்.

21. பேரவையின் எல்லா உறுப்பினர்களும் அலுவலர்களும் அத்துடன் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளாகவும் அதன் நோக்கங்களுக்காவும் பகிரங்க சேவையாளர்கள் எனக் கருப்படுதல் வேண்டும். பேரவையின் உறுப்பினர்கள், அலுவலர்கள், அத்துடன் சேவையாளர்கள் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

22. பேரவை, இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளாக அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும். பேரவை இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளாக அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனம் எனக் கருதப்படுதல்.

23. (1) (அ) இச்சட்டத்தின்கீழ் பேரவையினால் நன்னோக்கத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காகப் பேரவைக்கு எதிராக ; அல்லது

இச்சட்டத்தின் கீழ் அல்லது பேரவையின் பணிப்பின் மேல் எடுக்கப்பட்ட செயலுக்கான பாதுகாப்பு.

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது பேரவையின் பணிப்பின் மேல் செய்யப்படும் அல்லது அவரினால் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காகப் பேரவையின் எந்தவோர் உறுப்பினருக்கு, அலுவலருக்கு, சேவையாளருக்கு அல்லது முகவருக்கு எதிராக, தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுத்தலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் பேரவையினால் அல்லது அதற்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் பேரவையினால் உறப்படும் எவையேனும் செலவுகள், பேரவையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும். ஏதேனும் அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் பேரவைக்குச் செலுத்தப்பட்ட அல்லது பேரவையினால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள் பேரவையின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழ் அல்லது பேரவையின் பணிப்பின்மீது (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய எவரேனும் ஆளினல் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் கருதின், அத்தகைய செலவு அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினல் அறவிடப்பட்டாலன்றி, பேரவையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

பேரவை உறுப்பினர் ஒருவரின் உடலுக்கெதிராக அல்லது அவரின் ஆதனத்திற்கு எதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

24. பேரவைக்கு எதிராகக் கொண்டுவரப்படும் ஏதேனும் வழக்கில் ஆளுக்கு அல்லது ஆதனத்திற்கு எதிரான எழுத்தாணை எதுவும், பேரவை உறுப்பினர் ஒருவருக்கு எதிராக வழங்கப்படுதலாகாது.

விதிகளை ஆக்குவதற்குப் பேரவைக்குள்ள தத்துவங்கள்.

25. (1) இச்சட்டத்தினுல் விதிகள் ஆக்கப்பட வேண்டும் என அதிகாரம் வழங்கப்பட்டதான அல்லது தேவைப்படுத்தப்பட்டதான எல்லாக் கருமங்கள் தொடர்பாக அல்லது அவற்றில் எவையேனும் தொடர்பாக பேரவை விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் பேரவையினுல் ஆக்கப்பட்டதான விதி எதுவும், அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படும் வரையிலும் பயனுடையதாதலாகாது.

காணிகொள்ளற் சட்டத்தின்கீழ் அசைவற்ற ஆதனத்தை கொள்ளல்.

26. (1) அசைவற்ற ஆதனம் எதுவும், பேரவையின் ஏதேனும் நோக்கத்திற்குக் கொள்ளப்படத் தேவைப்படுமிடத்தும், அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் உத்தேசிக்கப்பட்ட கொள்ளலை அங்கீகரிக்குமிடத்தும், அத்தகைய ஆதனம் பொதுநோக்கொன்றிற்குத் தேவைப்படுகின்றதெனக் கருதப்படவேண்டுமென்பதோடு, அதற்கிணங்க காணிகொள்ளற் சட்டத்தின்கீழ் கொள்ளப்பட்டுப் பேரவைக்குக் கைமாற்றவும்படலாம்.

(3) காணிகொள்ளற் சட்டத்தின் கீழ் பேரவைக்கென அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்வதற்குச் செலுத்தப்படவேண்டிய ஏதேனும் பணத்தொகை பேரவையினுல் செலுத்தப்படுதல் வேண்டும்.

அசைவுள்ளதும் அசைவற்றதுமான அரச ஆதனத்தை பேரவைக்குக் கிடைக்கக் கூடியதாகச் செய்தல்.

27. (1) அரசின் அசைவற்ற ஏதேனும் ஆதனம் பேரவையின் நோக்கத்திற்கு தேவைப்படுமிடத்து, அத்தகைய நோக்கமானது, முடிக்குரிய காணிக்கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆதனத்தின் சிறப்புமானியக் கொடையொன்று அல்லது குத்தகையொன்று செய்யப்படக்கூடிய நோக்கமெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு, அதற்கிணங்க அக்கட்டளைச்சட்ட ஏற்பாடுகள், பேரவைக்கான அத்தகைய ஆதனத்தின் சிறப்பு மானியக் கொடையொன்றிற்கு அல்லது குத்தகைக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) அரசின் அசைவுள்ள ஏதேனும் ஆதனம் பேரவையின் நோக்கத்திற்குத் தேவைப்படுமிடத்து, அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பயன்படுத்துதலையும் பேரவைக்குக் கைமாற்றி, அதற்குரித்தாக்குதல் வேண்டும்.

விபரத்திரட்டுகளும் தகவலும்.

28. (1) பேரவை, இச்சட்டத்தின் கீழான அதன் தத்துவங்கள், கடமைகள் அத்துடன் பணிகள் என்பனவற்றைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அத்துடன் நிறைவேற்றுவதற்கு இயலுவதாக்கும் நோக்கத்திற்கு, பேரவை அல்லது அதற்கெனப் பேரவையினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், எழுத்திலான அறிவித்தல் மூலம், கமத்தொழில் ஆராய்ச்சியில் ஈடுபட்டவரான எவரேனும் ஆளை அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்திற்குள்ளாக, பேரவைக்கு அல்லது பேரவையினால் அதிகாரமளிக்கப்பட்டவரான ஆளுக்கு அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா விபரத்திரட்டுக்களையும் தகவல்களையும் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான அறிவித்தல் ஒன்றின்மூலம் ஏதேனும் விபரத்திரட்டினை அல்லது தகவலினைக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தப்பட்டவரான ஆள் எவரும், அத்தகைய ஆள் ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய விபரத்திரட்டினை அல்லது தகவலினைக் கொடுத்துதவுவது விலக்கப்பட்டுள்ளதானவிடத்தன்றி, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டதான காலத்திற்குள்ளாக அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் அவரது கடமையானதாதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்டதான அறிவித்தல் ஒன்றன் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதாக (1) ஆம் உட்பிரிவின்கீழ் கொடுத்துதவப்பட்ட விபரத்திரட்டு ஒன்றில் அடங்கியுள்ள தகவல் எதுவும், அத்தகைய விபரத்திரட்டினை அல்லது பேரவையின் பணிகளை நிறைவேற்றும் நெறியின்போதன்றி, வெளியிடப்படுதல் அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு அறிவிக்கப்படுதல் ஆகாது.

பேரவை, அதன் நடவடிக்கைகள் பற்றி அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பித்தல்.

29. பேரவை, ஒவ்வொரு நிதி ஆண்டின் முடிவிலும், ஆண்டின் போதுள்ள அதன் நடவடிக்கைகள்பற்றி அறிக்கை ஒன்றினை வெளியிடுதல் வேண்டும்; அத்துடன் அது அமைச்சரின் அங்கீகாரத்திற்கெனச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும். அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதன் மேல் அத்தகைய அறிக்கை பாராளுமன்றத்தின்முன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

தவறுகளும் தண்டங்களும்

30. (1) (அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவற்றையும் மீறிச் செயலாற்றும்;

(ஆ) 28 ஆம் பிரிவின்கீழ் அவருக்கு அனுப்பிவைக்கப்பட்டதான அறிவித்தல் ஒன்றன் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதாக அவரால் கொடுத்துதவப்பட்ட விபரத்திரட்டு அல்லது தகவல் எதிலும் மனதறியப் பொய்யான அல்லது தவறுதலான கூற்றொன்றினைத் தரும்;

(இ) 28 ஆம் பிரிவின் கீழ் அவருக்கு அனுப்பிவைக்கப்பட்டதான அறிவித்தல் எதனதும் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறும் அல்லது மறுக்கும்;

(ஈ) பேரவையின் உறுப்பினர் ஒருவராக அல்லது அலுவலர் ஒருவராக அல்லது சேவையாளர் ஒருவராக இருந்துகொண்டு, இச்சட்டத்தின் கீழ் அவருடைய தத்துவங்களைப் பிரயோகித்தலில் அல்லது கடமைகளைப் புரிதலில் அல்லது பணிகளை நிறைவேற்றுவதில் அல்லது அவை தொடர்பில் அவரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் தகவலை, இச்சட்டத்தினால் அத்தகைய தகவலை எந் நோக்கத்திற்கு வெளிப்படுத்துவதற்கு அவர் அதிகாரமளிக்கப் பட்டுள்ளாரோ அந்நோக்கத்திற்கன்றி, வேறேதேனும் நோக்கத் திற்காக எவரேனும் ஆளுக்கு வெளிப்படுத்தும்,

ஆளொருவர், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரியும் ஒவ்வோர் ஆளும், நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்பு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐநூறு ரூபாவிற்கு மேற்படாத குற் றப்பணம் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழு ஒன்றினால் புரியப்படுமிடத்து, அப்போது—

(அ) அந்த ஆட்கள் குழுவானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்குமாயின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் அலுவலரும் ;

(ஆ) அந்த ஆட்கள் குழுவானது குழுமம் ஒன்றாயின், குழுமத்தின் பங்காளர் ஒவ்வொருவரும்,

தவறுக்குக் குற்றவாளியானவராகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் அல்லது அலுவலர் ஒருவர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளர், அத்தகைய தவறானது அவரது அறிவுக்கெட்டாமல் புரியப் பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு எல்லா விழிப்புக் கவனத்தையும் அவர் மேற்கொண்டார் என எண்பித் தால், அத்தகைய தவறுக்கு குற்றவாளியெனக் கருதப்படுதல் ஆகாது.

பொருள் கோடல்.

21. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினா லன்றி :—

“கமத்தொழில் ஆராய்ச்சி” என்பது பண்ணைவிலங்குகள் உற்பத்தி, காட்டியல், கடற்றொழில், அத்துடன் கமக் கைத்தொழில் என் பன பற்றிய ஆராய்ச்சியையும் உள்ளடக்கும்.

“உள்ளூர் அதிகாரசபை” என்பது பட்டினசபை, மாநகரசபை, அல் லது அபிவிருத்திச் சபை எனப் பொருளாகும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.